1979 ஏப்ரல் 25]

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, 1978 மார்ச்சு மாதத்திற்குள் பாராளுமன்றத்தில் 60 கோடி ரூபாய் தமிழகத்தில் ரோடு பராமரிப்பிற்காக ஒதுக்கப் பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அந்தத் தொகை இங்கே செலவழிக்கப்பட்டதா ? அல்லது செலவழிக்கப்படாமல், மத்திய அரசுக்குத் திருப்பி அனுப்பப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78க்கு வெள்ளம், புயலுக்காக மத்திய அரசால் முன்பணமாகக் கொடுக்கப்பட்டது ரூ.20.52 கோடிதான். மானியமாகக் கொடுத்தது ரூ. 8.79 கோடி. இவைகள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன.

திண்டிவனம் தொகுதியில் விவசாயக் கடன்களுக்கு அபராத வட்டி.

*வினா எண். 808 :—திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கிய உரக்கடன் போன்ற விவசாயக் கடன்கள், தாசில்தார் கொடுத்த டிமாண்ட்படி தொகை செலுத்தப்பட்ட பின்பும் அக் கடன்களுக்கு அபராத வட்டி என மீண்டும் கிராம அதிகாரிக்கு நெ. 1 டிமாண்டுகள் கொடுத்து வசூலிக்கும்படி தாசில்தார் உத்திரவிட்டுள்ளாரா ?

(ஆ) இந்த அபராத வட்டி எந்த கடனுக்காக எந்த ஆண்டில் எவ்வளவு தொகைக்கு டிமாண்டு கொடுத்து வசூலிக்கப் பட்டது ?

(இ) தற்போது எத்தனை நபர்கள் மீது அபராத வட்டிக்காக எவ்வளவு தொகை வசூலிக்கும்படி டிமாண்டு தரப்பட்டு உள்ளது, தாலூகா வாரியாக ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) இந்த அபராத வட்டி 1377-ம் பசலி முதல் அதாவது 1—7—1967 முதல் காலம் கடந்து திருப்பிச் செலுத்தப்பட்ட பல்வேறு கடன்களுக்காக 1—7—77-ல் ரூ. 10,48,228.25-க்கு நெ. 1 டிமாண்டு கொடுக்கப்பட்டு 1—7—77 முதல் 30—6—78 வரை ரூ. 38,691.53 வசூலிக்கப்பட்டது.

(இ) திண்டிவனம் வட்டத்தில் மட்டும்தான் (1—7—77—30—6—78) 1387-ம் பசலியில் 9,967 நபர்களுக்கு அபராத வட்டிக்காக ரூ. 10,48,228-25-க்கு நெ. 1 டிமாண்டு தரப்பட்டது.

திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : தலைவர் அவர்களே, இந்த அபராத வட்டியாக வசூலித்த பணத்தைத் திருப்பிப்பெற அரசு வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அபராதமாக வசூலித்த பணத்தைத் திருப்பித்தர வேண்டும் என்று உறுப்பினர் ஏன் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. இருந்தாலும், அதற்கும் காரணம் இருக்கிறது. அரசு ஆணையைத் தவறாகப் புரிந்துகொண்டு, அந்த திண்டிவனம் வட்டாட்சியர் டிமாண்டு நோட்டீஸ் கொடுத்து, ரூ. 38,000 வசூல் செய்திருக்கிறார்கள். ஏன் வசூல் செய்யப்பட்டிருக்கின்றது என்று அவர் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. வசூலிக்கப்பட்ட பணம் திருப்பித்தரப்படும் அல்லது அவர்கள் பணம் கொடுக்க வேண்டியிருந்தால், அதிலே சரி செய்து கொள்ளப்படும்.

முதுகலை வகுப்புகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்க்கான இடங்கள்.

*வினா எண். 809 : திரு செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பல்கலைக் கழகத்தில் முதுகலை (எம்.ஏ.) வகுப்பில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை விழுக்காடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி அரசு ஆணை பிறப்பித்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில் அந்த ஆணை சென்னைப் பல்கலைக் கழகத்தால் மீறப் பெற்றுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) அரசு ஆணைப்படி, 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் (Scheduled caste and Scheduled tribes) சென்னைப் பல்கலைக் கழக முதுகலை வகுப்புகளில் கல்வி பயில 1978-79-ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே அரசு ஆணையினை சென்னை பல்கலைக்கழகம் மீறவில்லை என்பது தெளிவு.

திரு. ரா. கிருஷ்ணன்: சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இருக்கக்கூடிய தனியார் கல்லூரிகளில் இப்படிப்பட்ட 18 சதவிகித விழுக்காடு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படி நிரப்பப்படாமல் இருந்தால் அதை மீறுகிற நிர்வாகத்தின் மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது? இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?